1978 மார்ச் 18]

பயணிகள் தங்குவதற்கு எந்தவிதமான வசதியும் இல்லை. ஆகவே, மேட்டூரில் ஒரு முதல்தரமான சுற்றுலா விடுதி அமைக்கப்படுமா? அதில் ஏழை எளிய மக்களும் தங்கி, மகிழ்வடையும் வகையில் குறைந்த கட்டணம் வசூல் செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவரவர்களே, சுற்றுலா வளர்ச்சிக் கழகம் விடுதிகளைக் கட்டுவதற்கு பல்வேறு இடங்களைப் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட இடங்களில் மேட்டூர் அணைப் பகுதியையும் ஒன்றாகச் சேர்த்துக் கொள்ள முடியுமா என்று அக் கழகம் கேட்டுக் கொள்ளப்பட்டு இருக்கிறது.

தேசியத் தலைவர்கள் பிறந்தநாள் விழாக்கள்.

*வினா 606. திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு செய்தி-சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டின் தேசியத் தலைவர்களின் பிறந்தநாள் விழாவினை அரசு விழாவாகக் கொண்டாடிடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எந்தெந்தத் தலைவர்களின் பிறந்த நாள் விழாக்களைக் கொண்டாட உத்தேசிக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (அ) ஆம்.

(ஆ) தேசத் தந்தை காந்தியடிகள், அறிஞர் அண்ணா, முன்னாள் இந்திய பிரதமர் நேரு, முன்னாள் இந்தியாவின் கவர்னர் ஜெனரல் மூதறிஞர் இராஜாஜி முதலிய தேசத் தலைவர்களின் பிறந்த நாள் விழாக்களை அரசு கொண்டாடியுள்ளது. மேலும் முத்துராமலிங்கத் தேவர், மகாகவி சுப்பிரமணிய பாரதியார், கப்பலோட்டிய தமிழன் வ. உ. சிதம்பரம் முதலிய தேசத் தலைவர்களின் நினைவுநாள் விழாவும் கொண்டாடப்பட்டன. திருவள்ளுவர் திருநாள் ஜனவரி 15-ம் நாள் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பிறந்தநாள் விழா ஏப்ரல் மாதமும், பெருந்தலைவர் காமராஜ் பிறந்தநாள் விழா ஜூலை மாதமும், தந்தை பெரியார் ஈ.வெ.ரா. பிறந்தநாள் விழா செப்டம்பர் மாதமும், நேதாஜி பிறந்தநாள் விழா ஜனவரி மாதமும் கொண்டாட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

திரு. மி. வின்சென்ட்: தலைவரவர்களே, தமிழ்நாட்டிலே தலை சிறந்த சதாவதானியும், தலைவருமான திரு. வி. க. அவர்களே ஆசிரியராக ஏற்றுக் கொண்ட குமரி பாவலர்—செயிகுதம்பி பாவலர் அவர்கள் பிறந்த நாளை அரசு விழாவாகக் கொண்டாடும் செயற்குறிப்பு இருக்கிறதா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவரவர்களே, தேசியத் தலைவர் என்ற முறையில் நாடு முழுவதும் பாராட்டு கின்ற தலைவர்களின் பிறந்த நாளை அரசு கொண்டாடிக் கொண்டு இருக்கிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும் இப்படிப்பட்ட பல் வேறு சிறப்புமிக்க தலைவர்கள் இருந்திருக்கிறார்கள். அப்படிப் பட்ட எல்லாத் தலைவர்களின் பிறந்த நாளையும் அரசு கொண் டாடுவது என்று ஆரம்பித்தால் அதற்கு நாள் போதாது. என் றாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆலோசனையின்படி இப்படிப்பட்ட தலைவர்களின் பிறந்த நாளை நாட்டுக்கு உழைத்த தலைவர்கள் விழாவாக அந்தந்த மாவட்டத்தில் கொண்டாட இயலுமா என்பது பற்றி இந்த அரசு பரிசீலிக்கும்.

[முற்பகல் 9-10].

திரு. ப. சந்திரன்: தலைவரவர்களே, தந்தை பெரியார் அவர்களின் பிறந்த நாளை ஒரு நாள் மட்டும் விழாவாகக் கொண் டாடுவதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அவர் பிறந்த நாளை ஒரு வாரம் முழுவதும் பகுத்தறிவு வாரமாகக் கொண்டாடும் எண்ணம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவரவர்களே, நான் முன்னாலே சொன்னதைப்போல் விழாக்களைக் கொண்டாட ஆரம்பித்தால் ஆண்டு முழுவதும் கொண்டாடிக் கொண்டு இருக்க வேண்டும் என்ற நிலைமை இருக்கிறது. அவ்வளவு மிகச் சிறந்த, தலைவர்களை இந்த மாநிலம் பெற்று இருக்கிறது. என்றாலும் நான் பெரியார் அவர்களுடைய பிறந்த நாள் விழா கொண்டாடப் படும் என்று தெரிவித்தேன். எத்தனை நாள் என்று குறிப்பிட வில்லை. என்றாலும் ஆண்டுதோறும் ஒரு நாள் கொண்டாடு கிறோம். ஆனால் இந்த ஆண்டு வருகிற பெரியார் அவர்களின் பிறந்த நாள் விழா 100-வது பிறந்த நாள் விழாவாக வருவதால், தமிழகத்தைத் தட்டி எழுப்பிய அந்தத் தன்மான இயக்கத் தலை வனுக்கு இந்த அரசு மிகச் சிறந்த முறையில் 100-வது பிறந்த நாள் விழா இதுவரை தமிழகம் கண்டிராத அளவிற்கு, என் றென்றும் நினைவில் நிற்கிற அளவிற்கு கொண்டாட காரியங்கள் நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கள்ளக்குறிச்சியில் கல்லூரிக் குழு.

*வினா— 607. திரு. துரை முத்துசாமி,

திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென் ஆற்காடு மாவட்டம், கள்ளக்குறிச்சியில் ஒரு கலைக் கல்லூரி அமைக்க கமிட்டி ஏற்படுத்தப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?